# இலங்கை ஆசிரியர் சேவை உத்தியோகத்தர்களுக்கான மூன்றாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை

இதவடிவம் - 10

# செயல்நிலை ஆய்வு

ஆசிரியர் கல்வி நிர்வாகக் கிளை
கல்வி, உயரகல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
இசுருபாய

# இலங்கை ஆசிரியர் சேவை உத்தியோகத்தர்களுக்கான மூன்றாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை

## இதவடிவம் - 10

## செயல்நிலை ஆய்வு

| இதவடிவத்தின் பெயர் | செயல்நிலை ஆய்வு |
|---|---|
| நோக்கம் | 1. ஒரு ஆசிரியர் தனது தொழில்முறை வாழ்க்கையை வெற்றிகரமாகத் தொடர தெரிந்து கொள்ள வேண்டிய பிரயோக ஆய்வு வகைகள் நான்கினைப் பற்றி மேலதிக விடயங்களை கற்றுக் கொள்ளுதல்.<br>2. அன்றாடம் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனைகளைத் தீர்க்கப் பயன்படும் மிகவும் பொருத்தமான ஆய்வு முறையை தேர்ந்தெடுக்கும் திறனைப்பெறுதல்.<br>3. செயல்நிலை ஆய்வு மற்றவகை ஆய்வுகளிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பதை விளங்கிக் கொள்ளுதல்.<br>4. செயல்நிலை ஆய்வின் சிறப்பியல்புகளைப் புரிந்துகொள்ளுதல்.<br>5. செயல்நிலை ஆய்வின் செயலொழுங்கை விளங்கிக் கொள்ளுதல்.<br>6. செயல்நிலை ஆய்வொன்றில் அடங்க வேண்டிய படிகள் மற்றும் படிகளை உள்ளடக்கிய செயல்முறையின் அடிப்படையில், செயல்நிலை ஆய்வின் செயல்முறையை எவ்வாறு நெகிழ்வாக செயல்படுத்த முடியும் என்பதைப் புரிந்து கொள்ளுதல்.<br>7. செயல்நிலை ஆய்வு தொழில்முறை வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்தும் விதத்தை நடைமுறையினூடாக புரிந்து கொள்ளுதல்.<br>8. பிரதிபலிப்பின் மூன்று மாதிகளை (கடந்தகால, சமகால, வருங்கால செயற்பாடுகள்) அடையாளம் கண்டு, ஒருவரின் சொந்த கற்பித்தல் தொழில்முறை வளர்ச்சிக்கு பிரதிபலிப்பை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைப் புரிந்து கொள்ளுதல்.<br>9. செயல் நிலை ஆய்வுடன் பிரதிபலிப்பு எவ்வாறு தொடர்புடையது என்பதைப் புரிந்துகொள்ளுதல்.<br>10. செயலநிலை ஆய்வு எவ்வாறு சுய வளர்ச்சிக்கும், தனிப்பட்ட சேவை வளங்குனரின் வளர்ச்சிக்கும், கல்வி கட்டமைப்பின் வளர்ச்சிக்கும் வழிவகுக்கும் என்பதைப் புரிந்துகொள்ளுதல்.<br>11. பாடசாலை வகுப்பறையை அடிப்படையாகக் கொண்டு செயல் ஆய்வை நடத்துவதற்குப் பொருத்தமான ஒரு பிரச்சினையை கண்டறிந்து, அதன்படி, செயல் நிலை ஆய்வை திட்டமிட்டு ஆய்வு முன்மொழிவை எழுதுதல் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ளுதல்.<br>12. கற்பித்தல்-கற்றல் செயல்பாட்டில் மாணவர்கள் முகங்கொடுக்கும் |

| | |
|---|---|
| | பிரச்சினைகளை செயல்நிலை ஆய்வு மூலம் தீர்த்துக் கொள்ளுதல் தொடர்பான புரிதலைப் பெற்றுக் கொள்ளுதல்.<br>13. செயல்நிலை ஆய்வை மேற்கொண்டு ஆய்வு அறிக்கையை எழுதுதல் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ளுதல்.<br>14. சர்வதேச செயல்நிலை ஆய்வு நடவடிக்கைகளில் ஆசிரியர்கள் எவ்வாறு பங்கேற்கலாம் என்பதைப் புரிந்துகொள்ளுதல். |
| **கற்றற் பேறுகள்** | 1. ஒரு ஆசிரியர் தனது தொழில்முறை வாழ்க்கையை வெற்றிகரமாகத் தொடர தெரிந்து கொள்ள வேண்டிய பிரயோக ஆய்வு வகைகள் நான்கினைப் பற்றி விரிப்பார். (அளவீட்டு ஆய்வு, பரிசோதனை ஆய்வு, செயல்நிலை ஆய்வு மற்றும் அனுபவ ஆய்வு).<br>2. நாளாந்தம் எதிர்கொள்ளும் பல்வேறு சிக்கல்களைத் தீர்க்கப் பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான ஆராய்ச்சி வகையைத் தேர்ந்தெடுப்பார்.<br>3. செயல்நிலை ஆய்வு ஏனைய வகை ஆய்வுகளிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பதைப் விளங்கி விபரிப்பார்.<br>4. செயல்நிலை ஆய்வின் சிறப்பம்சங்களை தெளிவுபடுத்துவார்.<br>5. செயல்நிலை ஆய்வின் படிமுறைகளை விளங்கிக் கொள்வார்.<br>6. செயல்நிலை ஆய்வின் படிமுறைகளை அறிந்து அதற்கேற்ப ஆய்வினை நெகிழ்வான முறையில் செயற்படுத்தும் விதம் தொடர்பாக விபரிப்பார்.<br>7. செயல்நிலை ஆய்வு தொழில்முறை வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்துகிறது என்பதை விபரிப்பார்.<br>8. மூன்று வகையான பிரதிபலிப்புக் கோலங்களை விளங்கி (கடந்தகால, சமகால, எதிர்கால) அவை செயல்நிலை ஆய்வுடன் எவ்வாறு தொடர்புடையவை என்பதைப் விளக்குவார்.<br>9. ஒரு பொருத்தமான பிரச்சினையைக் கண்டறிந்து, அதற்கேற்ப செயல்நிலை ஆய்வைத் திட்டமிட்டு, ஒரு ஆய்வு முன்மொழிவைத் எழுதும் முறை பற்றி தெளிவுபடுத்துவார்.<br>10. செயல்நிலை ஆய்வை மேற்கொண்டு அதற்கேற்ப ஆய்வறிக்கையை எழுதப் போதுமான திறனைப் பெற்றுக் கொள்வார்.<br>11. சர்வதேச செயல்நிலை ஆய்வு நடவடிக்கைகளில் எவ்வாறு பங்கேற்பது என்பதைப் புரிந்து கொண்டு தெளிவுபடுத்துவார். |
| **உள்ளடக்கம்** | 1. தொழிலை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு தெரிந்து கொள்ள வேண்டிய பிரயோக ஆய்வுகள் நான்கினை (அளவீட்டு ஆய்வு, பரிசோதனை ஆய்வு, செயல்நிலை ஆய்வு மற்றும் அனுபவ ஆய்வு) மேற்கொள்ளும் முறை மற்றும் அதற்கான உதாரணங்களாக எடுத்துக்கொள்ளக் கூடிய ஆய்வுக் கட்டுரைகள்.<br>2. செயல் நிலை ஆய்வு ஏனைய ஆய்வுகளிலிருந்து வேறுபடும் விதம்.<br>3. செயல்நிலை ஆய்வின் பண்புகள்<br>4. செயல்நிலை ஆய்வின் செயன்முறை |

| | |
|---|---|
| | 5. செயல்நிலை ஆய்வின் படிமுறைகள்<br>6. செயல்நிலை ஆய்வு தொழில் மேம்பாட்டில் செல்வாக்கு செலுத்தும் விதம்.<br>7. பிரதிபலிப்பின் மூன்று மாதிரிகள் (கடந்தகால, சமகால, வருங்கால) மற்றும் செயல்நிலை ஆய்விற்கு பிரதிபலிப்பு தொடர்புபடும் விதம்.<br>8. தமது வகுப்பறை வகிபாகத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்நிலை ஆய்வை மேற்கொள்ளும் திறன்கள்.<br>9. செயல்நிலை ஆய்வு சுய வளர்ச்சிக்கும், கற்றலில் பங்கேற்போனின் வளர்ச்சிக்கும், கல்வி கட்டமைப்பின் வளர்ச்சிக்கும் பங்களிக்கும் விதம்.<br>10. பாடசாலை வகுப்பறையை அடிப்படையாகக் கொண்டு பிரச்சினை ஒன்றினை இனங்கண்டு செயல்நிலை ஆய்வொன்றைத் திட்டமிட்டு அதற்கான ஆய்வு முன்மொழிவை எழுதுதல்.<br>11. செயல்நிலை ஆய்வை மேற்கொண்டு, ஆய்வு அறிக்கையை எழுதுதல்.<br>12. சர்வதேச செயல்நிலை ஆய்வு நடவடிக்கைகளில் ஆசிரியர்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதைப் புரிந்துகொண்டு அவற்றில் பங்கேற்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்துதல்.<br><br>***மேற்குறிப்பிட்ட உள்ளடக்கங்களுக்கு மேலதிக தேடல்பரிந்துரைக்கப்படுகின்றது.*** |
| **கற்றல் முறைகள்** | சுய கற்றல் |